भारत का राजपत्र

# The Gazette of India

# இந்திய அரசிதழ்

असाधारण

**EXTRAORDINARY**

சிறப்பிதழ்

भाग XV अनुभाग 1

**Part XV Section 1**

பகுதி XV பிரிவு 1

प्राधिकार प्राकारित

**PUBLISHED BY AUTHORITY**

அதிகாரத்துடன் வெளியிடப்பட்டது

नई दिल्ली, सोमवार, 6 मार्च, 2000/1922 सका

New Delhi, Monday, 6th March 2000/1922 Saka

புது தில்லி, திங்கட்கிழமை, 6 மார்ச் 2000/1922 சக


**Ministry of Law, Justice and Company Affairs**
**(Legislative Department)**
**New Delhi**

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்
(சட்டமியற்றுத் துறை),
புது தில்லி

The Translation in Tamil of the Transfer of Property Act, 1882 (4 of 1882). The Dissolution of Muslim Marriage Act, 1939 (8 of 1939) The Foreign Contribution (Regulation) Act, 1976 (49 of 1976), The Companies (Donations to National Funds) Act, 1951 (54 of 1951), The Negotiable Instruments Act, 1881 (26 of 1881), The Company Secretaries Act, 1980 (56 of 1980), are hereby published under the Authoritative Texts thereof in Tamil under clause (a) of Section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973).

சொத்து உரிமை மாற்றச் சட்டம், 1882 (4/1882), முஸ்லீம் மண உறவு தீர்த்தல் சட்டம், 1939 (8/1939), அயல்நாட்டு நன்கொடை (ஒழுங்குமுறைப் படுத்துதல்) சட்டம், 1976 (49/1976), நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951 (54/1951), மாற்று முறையாவணங்கள் சட்டம், 1881 (26/1881), நிறுமச் செயலாளர்கள் சட்டம், 1980 (56/1980) ஆகியவற்றின் தமிழ்மொழி பெயர்ப்பு குடியரசுத் தலைவரின் அதிகாரத்தின்படி இதன்மூலம் வெளியிடப்படுகின்றன. அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 (50/1973) இன் பிரிவு 2 இன் கூறு 'அ' வின் படி இவையே தமிழில் அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் எனக் கொள்ளப்படுதல் வேண்டும்.

[Price: Rs.111.00]

# நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951

## (சட்ட எண் 54/1951)

[1951, அக்டோபர் 17]

தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுக்க நிறுமங்களை இயல்விப்பதற்கான ஒரு சட்டம்.

நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பும் அளாவுகையும்.

1. (1) இந்தச் சட்டம், நிறுமங்கள் (தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுத்தல்) சட்டம், 1951 என்று வழங்கப்பெறும்.

(2) இது, ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக, இந்தியா முழுவதையும் [1]அளாவி நிற்கும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில்—

(அ) "நிறுமம்" என்பது, நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 2இல் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான, ஒரு நிறுமம் என்று பொருள்படும்; மற்றும் அந்தச் சட்டத்தின் பிரிவு 2(அ)வின் பயன்திறனால் அந்தச் சட்டத்தின்படி கூட்டுருமமாக நிறுவப்பட்டு, பதிவு செய்யப்பட்டதாகக் கொள்ளப்படும் ஒரு நிறுமத்தையும் உள்ளடக்கும்;

7/1913

(ஆ) "நிறுமங்கள் சட்டம்" என்பது, [2]இந்திய நிறுமங்கள் சட்டம், 1913 என்று பொருள்படும்;

குறித்த சில தேசிய நிதியங்களுக்கு நன்கொடைகள் கொடுக்க நிறுமங்களுக்குள்ள அதிகாரம்.

3. நிறுமங்கள் சட்டத்தில் அல்லது அதனுடைய அலுவற்பாடுகளை ஒழுங்கு முறைப்படுத்துகின்றதும் அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ளதுமான பிற சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மற்றும் நிறுமத்தின் அமைப்புமுறையோடு அல்லது செயல்முறை விதிகள் அவ்வாறு செய்வதற்கு அதனை இயல்விக்காது என்ற போதிலும், நிறுமம் எதுவும், நிறுமங்கள் சட்டத்தின் பிரிவு 81இல் அடங்கியுள்ள வகையங்களுக்கிணங்க நிறைவேற்றப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் வாயிலாக, காந்தி தேசிய நினைவு நிதியத்திற்கு அல்லது சர்தார் வல்லபாய் தேசிய நினைவு நிதியத்திற்கு அல்லது இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக மைய அரசாங்கத்தால் அதன் தேசிய முக்கியத்துவத்தின் காரணத்தால் ஒப்பேற்பளிக்கப்பட்டுள்ள, அந்நோக்கத்திற்காக நிறுவப்பட்ட பிற நிதியம் எதற்கும் நன்கொடைகள் கொடுக்க அதிகாரம் அளிக்கலாம்.

35/1948 சட்டத்தின் நீக்கறவு.

4. [நீக்கறவு செய்தல் மற்றும் திருத்தம் செய்தல் சட்டம், 1957இன் (36/1957) பிரிவு 2ஆலும் இணைப்புப்பட்டியல் 1 ஆலும் நீக்கறவு செய்யப்பட்டது.] (17-9-1957).

---

1. பாண்டிச்சேரி (சட்டங்கள் நீட்டிப்பு) சட்டம், 1968இன் (26/1968) பிரிவு 3 ஆலும் இணைப்புப்பட்டியலாலும் ஒன்றியத்து ஆட்சிநிலவரையான பாண்டிச்சேரிக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

2. நிறுமங்கள் சட்டம், 1956ஐப் (1/1956) பார்க்கவும்.